IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
GUDIYATHAM, VELLORE DISTRICT.

C.C.NO.39/2021

DEPOSITION OF WITNESS P.W.1

| | | |
|---|---|---|
| NAME | : | KOMATHI |
| FATHER'S NAME | : | KUPPUSAMY |
| VILLAGE | : | SEMBEDU |
| OCCUPATION | : | COOLIE |
| AGE | : | 40 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 20th day of January 2025.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் செம்பேடு கிராமத்தில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் எனது பக்கத்து வீட்டை சேர்ந்தவர். கடந்த 15.10.2020 அன்று நான் ஆம்பூருக்கு வேலைக்கு சென்றிருந்தேன். எனது கடைசி குழந்தை 12 வயதுடைய கனிஷ்கா பள்ளிக்கு சென்றுவிட்டு வீட்டிற்கு வந்திருந்தார். நானும் மாலை வேலையை முடித்து கொண்டு வீட்டிற்கு வந்துவிட்டேன். எனது மகள் வெளியே விளையாடிக்கொண்டிருந்தார. அப்போது ஆஜர் எதிரி எனது மகள் கனிஷ்காவை அரவது வீட்டிற்கு அழைத்து சென்று தவறாக நடக்க முயன்றுள்ளார். எனது மகளின் அலறல் சத்தம்கேட்டு நான் ஓடிச்சென்று எதிரியின் வீட்டினிடம் பார்த்தபோது கதவு மூடியிருந்தது. கதவை நானே உடைத்து திறந்து பார்த்தபோது எனது குழந்தையின் முகத்தில் கடித்த காயங்களும், உடைகள் கிழிந்த நிலையிலும் இருந்தது. நான் எனது மகளை தூக்கிகொண்டு வீட்டிற்கு வந்தேன். அங்கு எனது மகளை விசாரித்தபோது ஆஜர் எதிரி தன்னை கன்னத்தில் கடித்ததாகவும், டிரஸ்சையும், ஜட்டியையும் பிடித்து கிழித்ததாகவும் கூறினார்.

பின்னர் எனது குழந்தையை அழைத்துகொண்டு ஆனந்தன் மருத்துவரிடம் கொண்டு சென்றேன். அவரிடம் நடந்த விவரத்தை கூறவில்லை. பிறகு அனைத்து மகளிர் காவல் நிலையத்திற்கு வந்து நடந்த விவரத்தை காவலர் வனிதாவிடம் தெரிவித்தேன். அவர் என்னிடம் படிக்கும் குழந்தையின் எதிர்காலம் பாதிக்கும் என்பதாலும், போக்சோ வழக்காக மாறிவிடும் என்பதாலும் வழக்கின் சங்கதிகளை மாற்றி எதிரி உன்னிடம் தவறாக நடந்து கொண்டதாக புகார் எழுதி கொடுக்கும்படி கேட்டுக்கொண்டார். மேலும் புகார் மனுவை அங்கிருந்த ஒருவரிடம் எழுதி காவல் நிலையத்தில் கொடுத்தேன். அந்த புகார் மனுவில் என்ன எழுதி இருந்தது என்று எனக்கு தெரியாது. எனது சம்பந்தம் இல்லாமல் போலிசாரே அந்த வழக்கை மாற்றி விட்டார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார்மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த புகார் மனுவில் எழுதப்பட்டுள்ள விவரம் எனக்கு தெரியாது.

அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்ப்படுகிறது. போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய கால அவகாசம் கேட்டு வழங்கப்பட்டு குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது. அனைத்து மகளிர் காவல் நிலைய காவல் ஆய்வாளரும், வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான ஷியாமளா மற்றும் காவலர் வனிதா ஆகியோர் நாளை இந்நீதிமன்றத்தில் ஆஜராக உத்தரவிடப்படுகிறது.**</u>

S/d−J.Jayganesh.,B.Tech.,B.L.,
Judicial Magistrate(FAC),
Gudiyatham.